Publication : Dina Thanti

Region : Coimbatore

Date : Jan 09, 2011

கோவையில் இன்று நடக்கிறது

மாணவர் திறமையை கண்டறியும் முகாம்

கோவை, ஜன. 9-

கோவை ஆர்.வி.எஸ். கல்வி அறக்கட்டளை நிர்வாக அலுவலர் டி.செந்தில்வேலன் தலைமையில் நடைபெறும் நிர்வாக இயக்குனர் அருண் சாமுவேல் ஆகியோர் கூறியதாவது:-

எக்ஸ்சீட் ஃபவுண்டேஷன் ஆஃப் இந்தியா முழுவதும் 400 பள்ளிகளுடன் ஒப்பந்தம் செய்து அந்த பள்ளிகளில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறது. குறிப்பாக கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தி வருவது மேற்கொண்டு புரிந்து கொள்ளும் வகையில் 'லர்ன் அப் ஹையர்' என்ற பயிற்சி பட்டறை முன்னாள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கோவையில் நடைபெற உள்ளது. இதற்கு அனுமதி இலவசம். இதில் கோவையில் உள்ள 10 பள்ளிகளை சேர்ந்த 400 மாணவ-மாணவிகள் கலந்து கொள்கிறார்கள். 2-ம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களை எதிர்கால அறிவியல் திறமை என்ன? அவர்களுக்கு பாடம் கற்பிக்கும் முறை என்ன? என்பன போன்ற வகுப்பு நாங்கள் ஆய்வு செய்வோம். இதே போல் அந்த குழந்தைகளிடம் மேற்கொண்டு குழந்தைகளின் திறமையை எவ்வாறு கண்டுபிடிப்பது அவர்களுக்கு தேவையான கல்வி முறையை அளிப்பது பற்றி நாங்கள் விளக்கி கூறுவோம். ஒரு பள்ளியில் எவ்வாறு கட்டமைப்பு வளங்களை பயன்படுத்தினாலும் ஆசிரியர்களின் வழிகாட்டுதல் நான் மாணவர்களின் முன்னேற்றம் உள்ளது. வகுப்பறையில் ஆசிரியர்கள் பேசும் நேரத்தைவிட இரண்டாம் மாணவர்களும் பேசி தங்கள் எதிர்கால கேள்விகளை கேட்க வேண்டும் என்பது தான் புதிய கல்வி முறையின் அடிப்படை கருத்து. இதனை பயிற்சியாளர் ஆசிரியர்களுக்கும் நாங்கள் அளிக்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.